DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.44/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராணி (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

(எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 17.02.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அலங்காநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். 15.08.2022ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் நான் அலங்காநத்தம் பிரிவில் இருக்கும் எனது வீட்டின் முன்பு இருக்கும் செடிகளுக்கு தண்ணீர்விட்டு கொண்டிருந்தேன். அப்போது திடீர் என்று சத்தம் கேட்டது. என்ன வென்று பார்த்தேன் சுதாரிப்பதற்குள் நாமக்கல் டு துறையூர் சாலையில் நாமக்கல் பக்கம் இருந்து வந்த டேங்கர் லாரி இருசக்கர வாகனத்தில் வந்தவர் மீது மோதி நிலைதடுமாறி அங்கு இருந்த வேப்பமரத்தில் மோதி பின்பு என் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. எனக்கு இடது காலில் காயங்கள் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் வந்தவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். லாரியின் பதிவு எண்ணை நான் பார்க்கவில்லை. விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. **(**எதிரி தரப்பில் எதிரியின் அடையாளம் குறித்து ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது**.)** என்னை சிகிச்சைக்காக ஆதிரை

மருத்துவமனைக்கு சாட்சி - 3 கார்த்திகா அழைத்து சென்றார். மேல் சிகிச்சைக்காக நான் நாமக்கல் மாருதி மருத்துவமனைக்கு சென்றேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

(எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**